# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 34/2020**

பெயர் : **சாந்தி** நாள் : 24.11.2022

பி.வா.சா.1 – வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

பி.வா.சா.1 – சாந்தி - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

இந்த வழக்கின் 1 ம் பிரதிவாதி பரமேஸ்வரன் என்னுடன் பிறந்த சகோதரர் என்றால், சரிதான். 3 ம் பிரதிவாதி எனது கணவர் ஆவார். எனது தகப்பனாரின் முதல் மனைவியின் பெயர் மாராயி என்றால், சரிதான். மாராயி உயிருடன் இருக்கும்போதே சட்டத்திற்கு புறம்பாக எனது தாயாரை எனது தகப்பனார் இரண்டாவது திருமணம் செய்து கொண்டார் என்றால், சரியல்ல. ஆண் வாரிசு இல்லை என்பதற்காக மாராயிதான் திருமணம் செய்து வைத்தார். மாராயி திருமணம் செய்து வைக்கவில்லை என்றாலும், எனது தாயாரை திருமணம் செய்து கொண்டார் என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை மற்றும் முதன்மை சாட்சியத்தில் மாராயிதான் எனது தகப்பனார் ரங்கையகவுண்டருக்கு இரண்டாவது திருமணம் செய்து வைத்தார் என்று கூறியுள்ளேனா என்றால், இல்லை. வழக்கு சொத்து இல்லாமல் எனது தகப்பனாருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து 10 ஏக்கர் உள்ளது. அந்த 10 ஏக்கர் நிலங்களை வாதி மற்றும் எங்களுக்கிடைய பிரிபடாமல் கூட்டு குடும்ப சொத்தாகத்தான் உள்ளது என்றால், சரிதான். வாதியின் தாயார் 02.02.1980 ல் கிரையம் வாங்கிய விபரம் தெரியுமா என்றால், தெரியும். சொத்து வாங்கவில்லை, காட்டிற்கு காடு மாற்றிக் கொண்டார்கள். மாராயி அந்த சொத்தை எனது தாயாரை ரங்கையகவுண்டர் திருமணம் செய்த பிறகுதான் கிரையம் பெற்றார். ரங்கையகவுண்டர் எனது தாயாரை சட்டத்திற்கு முரணாக திருமணம் செய்து கொண்டதால், மாராயின் பெற்றோர்கள்தான் அவர் பெயரில் கிரையம் செய்து கொடுத்தார்கள் என்று சொன்னால், சரியல்ல. மாராயி கடந்த 04.12.2012 ம் தேதியில் இறந்துவிட்டார் என்றால், சரிதான். 02.04.2013 ல் எனது தகப்பனார் ரங்கையகவுண்டர் இறந்துவிட்டார் என்றால், சரிதான். மாராயி மற்றும் ரங்கையகவுண்டர் இறப்பிற்கு பின்னிட்டு வழக்கு சொத்தில் பிரதிவாதிகளுக்கு பங்கு உள்ளது என்று கோரி வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளோமா என்றால், தாக்கல் செய்துள்ளோம். 15.10.2018 ம் தேதி வாதிகள் இருவரும் தங்களது தாயார் பெயரில்

உள்ள சொத்துக்களை எழுத்துமூலமாக பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்று சொன்னால், யாரிடமும் சொல்லாமல் பொய்யாக எழுதிக்கொண்டார்கள், வழக்கு சொத்து கூட்டு அனுபவத்தில்தான் உள்ளது. 15.10.2018 க்கு பின்னிட்டு வழக்கு சொத்தில் பங்கு உள்ளது என்று வழக்கு ஏதேனும் தாக்கல் செய்தோமா என்றால், நாங்கள் கூட்டாகத்தான் அனுபவித்து வந்தோம். ரங்கையகவுண்டர் மற்றும் மாராயி இறப்பிற்கு பின்னிட்டும், 15.10.2018 தேதிய பாகப்பிரிவினைக்கு பின்னிட்டும் எங்களுக்கு வழக்கு தொடர்வதற்கான எந்தவொரு முகாந்திரமும் இல்லை என்பதால்தான் இதுநாள் வரை எந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல. இந்து வாரிசுரிமை சட்டத்தின்படி வாதிகள் இருவரும் தங்களின் தாயாருக்கு உரிமையான சொத்தை பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றாலும், எனவே எனக்கு வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லையென்று சொன்னாலும், சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு ஒரு வருடத்திற்கு முன்பாக எனது தகப்பனார் பெயரில் உள்ள வழக்கு சொத்தை தவிர மற்ற சொத்துக்களை பாகம் பிரித்துக் கொள்வது சம்பந்தமாக ஊர் பெரியவர்கள் முன்னிலையில் பலமுறை பேசப்பட்டது என்று சொன்னால், சரியல்ல. ஊர் பெரியவர்கள் முன்னிலையில் நடைபெற்ற சமரச பேச்சுவார்த்தையில் எந்த முடியும் ஏற்படவில்லை என்று சொன்னால், சரிதான். பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படாத காரணத்தினால் வாதிகள் இந்த வழக்கை சொத்தை அனுபவிப்பதை தடுத்தோம் என்று சொன்னால், சரியல்ல. வாதிகள் 15.10.2018 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின்படி அவரவர்களுக்குண்டான நிலங்களில் அனுபவ உரிமையில் இருந்து வருகிறார்கள் என்று சொன்னால், சரியல்ல. வாதிகள் தங்கள் பெயருக்கு பட்டா மாற்றம் செய்வதற்காக கிராம நிர்வாக அலுவலரிடம் மனு செய்தபோது அந்த மனுவிற்கு நான் ஆட்சேபனை தெரிவித்தேன் என்றால், சரிதான். 1ம் வாதி 2ம் வாதிக்கு நிலம் விற்பனை செய்வது சம்பந்தமாக ஒரு வாய்மொழி ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்ட விபரம் தெரியுமா என்றால், தெரியாது. மேற்படி விபரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றாலும், நான் 1ம் வாதியிடம் நிலத்தை கொடுக்க கேட்டேன் என்றாலும், சரியல்ல. இந்த வழக்கு சொத்துக்கள் தவிர எனது தகப்பனார் பெயரிலுள்ள மற்ற சொத்துக்களில் வாதிகளுக்கு அவர்களுக்குரிய பாகத்தை கொடுக்க தயாராக உள்ளோம் என்றால், தயாராக உள்ளோம். வழக்கு சொத்தில் பிரதிவாதிகள் பாகம் கேட்க எந்த முகாந்திரமும் இல்லையென்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்து வாதிகளுக்கு சொந்தமானது என்பதால், வாதிகள் விளம்புகை பரிகாரம்

கேட்கவேண்டிய அவசியம் இல்லையென்று சொன்னால், சரியல்ல. 15.10.2018ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் செல்லத்தக்கது அல்ல என்று கோரி பிரதிவாதிகளுக்கு எந்த முகாந்திரமும் இல்லையென்று சொன்னால், சரியல்ல. 15.10.2018ம் தேதி வாதிகளுக்கிடையே ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் செல்லத்தக்கது என்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்தில் 1, 2 பிரதிவாதிகள் எந்த பங்கும் பெற தகுதியில்லாதவர்கள் என்று சொன்னால், சரியல்ல. வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கத்தக்கது என்று சொன்னால், சரியல்ல.

ஒப்பம் /சாந்தி

ஒப்பம்/ திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சங்ககிரி.